**OS. No. 52/2022**

**நாள். 17.07.2025.**

**பி.வா.சா. 1 –** சொக்கநாதன்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் எம்சிஏ படித்துள்ளேன், நான் Accenture IT Company ல் project Manager ஆக பணிபுரிந்து வந்தேன். நான் தற்சமயம் LLB படித்து முடித்துவிட்டு பார்கவுன்சிலில் பதிவு செய்ய காத்துள்ளேன். இந்த விவரங்களை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்ல வில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலம் பாரா 2ல் சொல்லியுள்ளபடி வாய்மொழி ஒப்பந்தம் இல்லை. பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தின்படி தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.12 இலட்சத்திற்கு முதலில் அடமானக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தேன். முதல் அடமானகடன் பத்திரம் 19.06.2018ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அடமானப்பத்திரத்தில் சாட்சியாக இராமநாதபுரம் நீலகண்டி அக்ரஹாரம் தெரு கருப்பையா மகன் ராஜாங்கம் போட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் முன்னிலையில்தான் அடமானக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 19.06.2018ம் தேதி அடமானக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து வாங்கிய ரூ.12 லட்சத்திற்கு இதுவரை நான் வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செலுத்தியதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் Net Banking மூலமாக வாதியின் சென்னை சாலைகிராமம் HDFC வங்கி கிளைக்கு மாதாமாதம் அனுப்பியுள்ளேன். ரூ.12 இலட்சத்திற்கு மாத வட்டி எவ்வளவு என்றால் ஆண்டுக்கு 36 சதவீதம் வீதம் மாதம் ரூ.36 ஆயிரம் வட்டி வாங்கினார். நான் வட்டி செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணகள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், இல்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக வட்டி செலுத்தி வந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 19.06.2018ம் தேதி எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தில் கண்ட சொத்தை காட்டி இரண்டாவது தடவையாக ரூ.23,69,000/– பணம் கடனாக வாங்கினேன் என்றால் சரியல்ல. இரண்டாவது தடவை ரூ.23,69,000/– பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரத்தில் மொத்தத்தொகை ரூ.35,69,000/–க்கு 10.11.2020 வரைக்கும் வட்டியாக ரூ.4 இலட்சம் கொடுத்து வரவு

வைக்கப்பட்டு கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் வாங்கிய தொகைக்கு நான் இதுநாள் வரை ரூ.4 இலட்சம் மட்டும் செலுத்தியுள்ளேன் என்றும், வேறு எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.32 இலட்சத்து 70 ஆயிரம் வட்டிக்காகவும், அசலுக்காகவும் புரோ நோட் மூலமாக ரூ.19,44,000/-மும், நெட் பேங்கிங் மூலமாக ரூ.12,91,700/-ம் வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக ரூ.4 இலட்சமும் செலுத்தியுள்ளேன். இந்த விவரங்களை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான், விடுபட்டுவிட்டது. வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மேல்அடமானப்பத்திரத்திலும் இராஜாங்கம் தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான், அவர் வாதிக்கு நெருங்கிய உறவினர், எனக்கும் உறவினர் என்றால் சரியல்ல. நான் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த சமயம் கொரோனா காலம் என்பதால் நான் பதில் அனுப்பவில்லை. பின்னிட்டு வாதி நினைவூட்டல் கடிதம் அனுப்பிய பிறகு ஒரு பதில் கடிதம் அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய பதில் அறிவிப்பிலும் வட்டி மற்றும் அசல் செலுத்தியது சம்மந்தமாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.